பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 10 (26—9—72) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 11 (27—9—72) புதன் [இதழ்: 86

தோட்டி வேலை செய்ய எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள் மனு

★

கோழிக்கோடு, செப். 26—

கோழிக்கோட்டில் மருத்துவக் கல்லூரியில் மகுதி நேரத் தோட்டி வேலை செய்யப் பள்ளி இறுதி வகுப்புத் தேறி--தட்டெழுத்தும் பயின்றவர்களும் மனுச் செய்திருக்கின்றனராம்.

மாதம் ஒன்றுக்கு ரூ. 63 ஊதியம் கிடைக்கும் பணியாம் இது!

ஆசிரியர்கள் தெருவிலே பிச்சையெடுக்கிறார்கள்

ஆறு மாதமாக ஊதியம் இல்லை-- அறப்போராட்டம் தொடர்கிறது

இந்திரா கட்சி ஆளும் ஆந்திர மாநிலத்தில் நெஞ்சுருக்கும் நிகழ்ச்சி

விசயவாடா, செப். 25—

சாதி இந்துவான ஆசிரியர் ஒருவர் பசிக் கொடுமை தாள முடியாமல் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு ஒன்றுக்குச் சென்று ஒரு கவளம் சோற்றுக்குப் பிச்சையெடுத்திருக்கிறார்; அதனை அவரது நண்பர் ஒருவர் காண நேரிட்டதால் அப்படியே வெட்கித் தலைகுனிந்து நின்றிருக்கிறார்!

இந்த நிகழ்ச்சி ஆந்திரத்தில் நடைபெற்றிருக்கிறது.

மேற்கு கோதாவரி மாவட்டம் நரசபூர் நகராட்சி நடத்தும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாததனால் பல ஆசிரியர்களும் இப்படிப்பட்ட பரிதாப நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இப்பள்ளிகளில் மொத்தம் 140 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்; இவர்களுக்குக் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சம்பளமே வழங்கப்படவில்லையாம்; ஆகவே இவர்கள் கடந்த ஒன்றரை மாத காலமாக வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

இந்த 140 ஆசிரியர்களில் பாதிக்கு மேற்பட்டோர் பெண்களாவர்.

இதுவரையில் இவர்களுக்குச் சேரவேண்டிய ஊதிய பாக்கி ரூ. 2 இலட்சத்திற்கு மேலிருக்கும் என்று கூறப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாகவே இவர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் வழங்கப்படுவதில்லையாம்!

12 பேர்களைக் காப்பாற்றவேண்டிய பெண் ஆசிரியை ஒருவர், தமது பொருட்களையெல்லாம் அடகு வைத்துவிட்டதாகக் கண்களில் நீர் ததும்பத் தெரிவித்தார்.

மேலும் அவர், மாதம் 100-க்கு 25 சதவிகிதத்தில் வட்டிக்குப் பணம் கடன் வாங்கியிருக்கிறாராம்.

வேறொரு ஆசிரியர் தமது மனைவியின் தாலியைக்கூட அடமானம் வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

சிலர் தங்களுடைய தட்டுமுட்டுச் சாமான்கள்--துணிமணிகளையும்கூட விற்றுவிட்டிருக்கின்றனர்.

"எங்களுடைய மானத்தை இழந்து உயிர் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது" என்று அவர்கள் கூறுகின்றனர்.

இப்போது நடைபெறும் வேலை நிறுத்தத்தில் 127 ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்; தட்டிகளாலும் -- துணியாலும் அமைக்கப்பட்ட பந்தலில் அமர்ந்து கொண்டிருக்கின்றனர்; சுதந்தர வெள்ளி விழாவை அவர்கள் அங்கிருந்தே கொண்டாடியிருக்கின்றனர்.

செப்டம்பர் 5-ம் நாளன்று 'ஆசிரியர் நாள்' கொண்டாடப்பட்டது; அதை இந்த ஆசிரியர்கள், 'ஏமாற்ற நாள்' ஆகக் கொண்டாடினர்.

பொதுக்கூட்டங்களும் -- ஆர்ப்பாட்டங்களும் -- தொடர் உண்ணாநோன்புகளும் மேற்கொண்டு இவர்கள் போராடி வருகின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்குப் பொது மக்கள் பெரும் ஆதரவு தருகின்றனர்; நகர மக்கள் ஒரு நாள் கடையடைப்பு -- வேலை நிறுத்தம் செய்தனர்; கல்லூரி மாணவர்களும் -- ஆசிரியர்களும் இவர்களுக்கு ஆதரவாக அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்; ஊழியர் ஒருவர் சாகும்வரை உண்ணாநோன்பு மேற்கொண்டு சில உறுதிமொழிகளின் பேரில் அதை நிறுத்தினார்.

இவர்கள் இரண்டு நாட்கள் பகிரங்கமாகவே தெருக்களில் சென்று பிச்சை கேட்டிருக்கின்றனர்; இரண்டு மூட்டை அரிசியும் -- ரூ. 329-ம் இவர்களுக்குக் கிடைத்தன; நன்கொடைகள்மூலம் ரூ. 1,000 வேறு திரண்டிருக்கிறது.

நகராட்சி மன்றத்தின் நிதி நிலை சரியில்லாததே இந்நிலைமைக்குக் காரணமாம்.

நகராட்சி உறுப்பினர்கள் சிலர், இப்பிரச்சினையின்மீது இராஜிநாமா செய்ய முன்வந்திருக்கின்றனர்.

ஏனைய பள்ளிகளுக்கு அளிக்கப்படுவதுபோல், ஆசிரியர் ஊதியத்தை அரசே மானியமாகத் தந்தாலன்றி, தங்களது பிரச்சினை தீராது என்று இந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

"அரசின் அலட்சியமே இந்தச் சோகச் சூழ்நிலைக்குக் காரணமாகும்" என்பது ஆசிரியர்களின் குற்றச்சாட்டாகும்.

கோவைக்குக் கேரளத்து நீர்

பேச்சு நடத்த சாதிக்பாட்சா செல்கிறார்

கோவை, செப். 26—

"கேரளம் -- தமிழ்நாடு நதி நீர்ப் பங்கீடு சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காகத் தமிழ்நாடு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அக்டோபர் முதல் வாரம் திருவனந்தபுரம் செல்வார்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அவினாசியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

"இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது பாண்டியாறு -- புன்னம்புழா திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றி அவர்கள் முக்கியமாக விவாதிப்பார்கள்; இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அவினாசி -- பல்லடம் -- கோயமுத்தூர் தாலுகாக்களிலுள்ள புஞ்செய் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்" என்றும் அவர் சொன்னார்.

மத்திய அரசுக்கு மைசூர் விடுக்கும் அறைகூவல்

மின்சாரப் பற்றுக்குறையைப் பெருமளவு தீர்க்க முடியும்

ரூ. 266 கோடி நிதி ஒதுக்க டில்லி முன்வருமா?

பெங்களூர், செப். 26—

"மைசூர் மாநிலத்திலுள்ள 6 நீர் மின்சாரத் திட்டங்களுக்குத் தேவையான ரூ. 266 கோடியை ஒதுக்க மத்திய அரசு முன்வருமானால், நாட்டில் ஏற்பட்டுவரும் மின்சாரப் பற்றுக்குறையில் கணிசமான பகுதியை மைசூர் மாநிலத்தால் ஈடுகட்ட முடியும்"

என்று மைசூர் மாநில அரசு, இந்தியத் திட்டக் குழுவுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது.

இத்தகவலைத் தெரிவித்த மைசூர் மின்சாரத் துறை அமைச்சர் சென்னபாசப்பா, செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:—

"நாட்டின் நலன் கருதியும் -- பொருளாதார முன்னேற்றம் கருதியும், எங்களுடைய திட்டத்தைத் திட்டக் குழுவும் -- மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளும் என்றே கருதுகிறோம்; ஏனெனில், மைசூரில் உற்பத்தியாகும் மின்சாரத்துக்கு ஒரு யூனிட்டுக்கு மூன்றிலிருந்து நான்கு காசு வரையில்தான் செலவாகும்; அதேநேரத்தில், இப்போது நாடு முழுவதும் அமைக்கப்பட்டுவரும் அனல் மற்றும் அணு மின்சாரத்துக்கு யூனிட்டுக்கு 13 காசு செலவு ஆகும்; எனவே, நாட்டுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கிடைப்பதுடன், இந்த மின்சாரத்தை விற்பதன்மூலம் மைசூர் மாநிலத்துக்கு ஆண்டுதோறும் ரூ. 42 கோடி வருமானமும் கிடைக்கும்.

மைசூர் மாநிலத்தில் மொத்தம் 5,500 மெகாவாட் அளவு மின்சக்தி உற்பத்திக்கான வசதி இருக்கிறது; இதில் இப்போது 967 மெகாவாட் அளவு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது; 4,500 மெகாவாட் மின்சக்தி பயன்படுத்தப்படாமலே இருந்துவருகிறது; ஆகவே, எங்கள் திட்டத்தை மத்திய அரசு ஏற்கவேண்டியது அவசியமாகும்."

பிலிப்பைன்ஸ் நாட்டில் குழப்பம்

அரசைக் கவிழ்க்கச் சதி: இராணுவச் சட்டம் அமுல்-- மாநில கவர்னர்கள் கைது

மணிலா, செப். 26—

பிலிப்பைன் நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதையொட்டி, அங்கு இராணுவச் சட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

தமது தலைமையில் இருந்துவரும் அரசைக் கவிழ்க்கச் சதி செய்வதாகக் கூறிக் குடியரசுத் தலைவர் மார்கோஸ் ஏராளமான கம்யூனிஸ்டுகளைக் கைது செய்திருக்கின்றனர்.

மேலும், மூன்று செனட்டர்கள்--மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் -- இரண்டு மாநில கவர்னர்கள்--மற்றும் ஏராளமான பத்திரிகையாளர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

"இவர்கள் அனைவரும் அரசைக் கவிழ்க்க நேரடியாகச் சதி செய்தவர்களாவர்" என்று மார்கோஸ் குறிப்பிட்டார்.

ஒரே ஒரு செய்தித் தாள்தான் வெளிவந்து கொண்டிருக்கிறது; வானொலி நிலைய ஒலிபரப்புக்களும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கேரளத் தொழிற்சங்கத் தலைவர் கொலை

திருவனந்தபுரம், செப். 25—

பிரபல இடது கம்யூனிஸ்டுத் தலைவரும்--தொழிற்சங்க வாதியுமான அழிக்கோடன் இராகவன் என்பவர் நேற்று முன்தினம் திருச்சூரில் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இதைக் கண்டித்து கேரளத்தின் பல இடங்களிலும் அர்த்தாலும்-- வேலைநிறுத்தமும் நடைபெற்றிருக்கின்றன.

கொலை செய்தவர்கள் -- இடது கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற தீவிர கம்யூனிஸ்டுகளாவர் என்று கூறப்படுகிறது.

இதன் தொடர்பாக அக்கட்சியின் தலைவர் ஆரியன் உட்படப் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இது குறித்து நேற்று கேரளச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

"தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்; குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்" என்று, போலீசுத்துறை அமைச்சர் கருணாகரன் உறுதியளித்ததையடுத்துத் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஓட்டுபவருக்கே கார் சொந்தமாகும் திட்டம்

கூட்டுறவு முறையில் சங்கம் அமைப்பு

மதுரை, செப். 25—

"சொந்தாகக் கார் ஓட்டுபவர்களுக்குத் தவணை முறையில் வாடகைக் கார் வழங்கப்படும்"

என்று, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சீதா ராமதாஸ் அறிவித்தார்; செய்தியாளர்களிடம் அவர் சொன்னதாவது:—

"சொந்தமாகத் தொழில்செய்யும் டிரைவர்களுக்குத் தவணைமுறையில் வாடகைக் கார் வாங்கிக் கொடுப்பதற்காக மதுரையில் 'வாடகைக் கார் ஓட்டுவோர் கூட்டுறவுச் சங்கம்' புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது; 25 பேர் இதில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

முதலில் ரூ. 500 முதலீடு செலுத்த வேண்டும்; கார் வாங்கும்போது ரூ. 2,500 செலுத்தவேண்டும்.

இவர்களுக்கு அரசாங்கப் பாங்கியின் மூலம் -- அரசு பொறுப்பேற்று -- புதிய 'அம்பாசிடர்' கார் வாங்கிக்கொடுக்கும்; இந்த வாடகைக் காரில் மீட்டர் (ஓட்டியத் தூரத்தைக் காட்டும்கருவி) பொருத்தப்பட்டிருக்கும்.

கார் வாங்கும் மொத்தத் தொகையை -- வட்டியுடன் 5 ஆண்டுகளில் திருப்பிச்செலுத்திவிட வேண்டும்; அதாவது நாள் தோறும் ரூ. 18 வீதம் செலுத்தி வந்தால் 5 ஆண்டுச்குப் பிறகு அந்தக் கார், ஓட்டுபவருக்கே சொந்தமாகிவிடும்.

இதேபோன்ற கூட்டுறவுச் சங்கம் திண்டுக்கல்லிலும் அமைக்கப்படும்; அங்கு 20 பேருக்கு 20 கார்கள் வாங்கிக் கொடுக்கப்படும்."

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அழைப்பு

சென்னை, செப். 25—

தாமிரப் பத்திரங்களைப் பெறுவதற்கான தகுதி விவரங்களை மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களிடம் அளிக்குமாறு விடுதலைப் போராட்ட வீரர்களை மத்திய உள்துறை அமைச்சகம் சுற்றறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு விடுதலை வீரர்கள் உண்மையான விவரத்தைத் தெரிவித்தால் பெரிதும் உதவியாக இருக்கும் -- புகார்கள் குறையும்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாநிலச் சின்னம் -- மிருக வாசகம் -- தாமரை வடிவம் ஆகியவை தாமிரப் பத்திரத்தில் அடங்கியிருக்கும்; அதனைப் பெறுபவரின் பெயரைப் பொறிக்கவும் அதில் இடமிருக்கும்.

அன்பால்--பண்பால் கழகத்தை வளர்த்தவர் அண்ணா

மாற்றுரை மதிக்கும் மனவளம் அற்றவர்கள் வீழ்ச்சியுற்றனர்

ஏழை எளியவர்களின் இதயத்தில் என்றும் இருக்கும் மூன்றெழுத்து

அரக்கோணம் அண்ணா பிறந்த நாள் விழாவில் அமைச்சர் என். வி. நடராசன் உரை

அரக்கோணம், செப். 25—

'திராவிட முன்னேற்றக் கழகத்தை -- கழக அரசை இழித்தும் பழித்தும், கழகத் தலைவர்களைக் கேவலமாகத் தாக்கியும் பேசிசி -- எழுதுவதாலேயே தி. மு. கழகம் வீழ்ச்சியுறும் என்றிருக்குமானால், கழகம் என்றோ மறைந்திருக்கக் கூடும்; ஆனால், கழகத் தலைவர்களும் -- தோழர்களும் எதிர்க் கட்சிகளின் வசைமொழிகளையும் -- தாக்குதலையும் சகித்துக்கொண்டு தங்கள் கடமையில் ஈடுபட்டு வருவதால் கழகம் அசைக்க முடியாத இயக்கமாக வளர்ந்து வருகிறது!

'இந்த உண்மையை நடைமுறை வாயிலாகக் கண்ட பிறகும், காமராசர் போன்றவர்களுக்கு மாற்றுரை மதிக்கும் மனவளம் உண்டாகவில்லை என்றால், காங்கிரசுக் கட்சியினுடைய வளர்ச்சிக்கு இவர்களே முட்டுக்கட்டையாக இருந்துவருகிறார்கள் என்பதை அரசியல் விவேகம் உள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்கள்"

என்று தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

அரக்கோணத்தை அடுத்த மர மேசுவரமங்கலம் -- மேலப்புலம் புதூர் ஆகிய ஊர்களில் தி. மு. க. சார்பில் செப். 22-ம் நாளன்று அண்ணா பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

அந்த விழக்களில் கலந்துகொண்டு பேசும்போது திரு. என். வி. நடராசன் அவர்கள் கூறியதாவது:—

"அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி, தமது ஆற்றலால் -- அறிவால் -- கடமை உணர்வால் -- அடக்கத்தின் பிரதிபிம்பமாக விளங்கிக் கழகத்திற்குத் தேடிவைத்த பெருமையை நாடே அறியும்.

அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் தமது உழைப்பாலும் -- ஆற்றலாலும் -- கழகத் தோழர்களின் ஒத்துழைப்பாலும் கழகத்திற்கு மேலும் பெருமையை -- பொது மக்களின் தொடர்பை வளர்த்திருக்கிறார்.

ஆனால் தமிழ்நாட்டின் காங்கிரசுத் தலைவர்கள், காந்தியடிகள் தேடிவைத்த பெருமையைச் சீர்குலைத்தார்கள்!

கலைஞரும்--நாவலரும், அண்ணா கழகத்திற்குத் தேடிவைத்த பெருமையை இரட்டிப்பாக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

சனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால், அரசியல் பண்போடு கூடிய எதிர்க் கட்சி நிச்சயம் தேவை; அப்போது தான் நாட்டை ஆள்பவர்களும் தங்களுடைய கடமைகளை ஒழுங்குற நிறைவேற்ற முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், 'காங்கிரசு இயக்கம் அடியோடு சீர்குலைந்துவிட வேண்டும்' என்று எண்ணியது கிடையாது; 'காங்கிரசு சிறந்த எதிர்க் கட்சியாக விளங்க வேண்டும்' என்பதே கழகத்தின் இதய பூர்வமான எண்ணமாகும்.

ஆனால், காங்கிரசுத் தலைவர்களான காமராசர் -- பக்தவத்சலம் போன்றவர்கள்; கழகத்திற்கு எதிர்க் கட்சிகளாக நடமாடுகிறார்களே தவிர, சனநாயக அடிப்படையில் எதிர்க் கட்சியாக விளங்குவதற்கு கவலை செலுத்தவில்லை; இது வருந்தக்கூடியதாகும்.

அண்ணா அரசியல் வேறுபாடு காரணமாக யாரையும் பகைவர்களாகவோ மதிப்புக் குறைவாகவோ எண்ணியது கிடையாது; அந்தப் பண்புதான் கழகத்திற்கு அடிப்படையாக அமைந்து பெற்றிருக்கிறது.

கழக அரசு செய்யும் நன்மைகளைக்கூட எதிர்ப்பது என்பது எதிர்க் கட்சிகளின் ஆத்திரத்தை எடுத்துக் காட்டுமே தவிர அறிவின் வழியாக நின்று பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பயன்படாது.

எனவே, அண்ணா பிறந்த நாள் விழாவில், 'காமராசர் போன்ற காங்கிரசுத் தலைவர்களை கேட்டுக் கொள்வேன் -- அரசு நன்மைகளை செய்யும்போது பாராட்டியும், ஏதாவது தவறு செய்யுமானால் கண்டித்துத் திருத்தும் மனவளத்தை பெற வேண்டும்' என்று!

'அண்ணா' என்ற அந்த மூன்று எழுத்து, கோடிக்கணக்கான ஏழை---எளிய--நடுத்தர மக்களின் இதயங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறது.

'அவர் காலத்திலே நாம் வாழ்ந்தோம் --- அண்ணாவோடு சேர்ந்து பொதுவாழ்வில் ஈடுபாடு கொண்டோம் --- அவரோடு சிறையில் இருந்தோம் -- நமது குடும்பத்தாரோடு பழகிய காலத்தைவிட அருமை அண்ணா அவர்களோடு பழகிய காலம்தான் அதிகம்' என்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

ஆகவே, அந்த மாபெரும் தலைவர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றக் கழகத் தலைவர் கலைஞருக்குத் துணையாக அணிவகுத்து நின்று வெற்றிகளைப் பெறுவோம்' அண்ணாவின் இலட்சியங்களை முழுமையாக நிறைவேற்றுவோம்' என்ற உறுதிப்பாட்டினை இதயபூர்வமாக எடுத்துக்கொண்டு செயல்படுவதுதான் அண்ணாவின் உழைப்பிற்கும் -- இலட்சியத்திற்கும் நாம் செலுத்தும் தூய்மையான நன்றியறிதலாகும்!"

கூட்டத்தில் முன்னாள் மேயர் சா. கணேசன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர் பலராமன், சஞ்சீவி, அம்பிகாபதி, ரசாக் எம்.சி., மாணிக்கம் ஆகியோரும் பேசினர்.

மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர்

இந்தியாவில்தான் அதிகமாம்

ஜினீவா, செப். 25—

உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் பேர் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

உலக சுகாதார நிறுவனம் நடத்திய ஒரு ஆய்விலிருந்து இத்தகவல் தெரியவந்துள்ளது.

மலேரியாவினால் எத்தனைப் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவதற்காக இந்த நிறுவனம் ஓர் உலக ஆய்வு நடத்தியது.

இதன்மூலம், கடந்த ஆண்டு சூலை மாதம் முதற்கொண்டு டிசம்பர் மாதம் முடிய 6 மாதத்தில் மொத்தம் 31,39,590 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது; இவர்களில் பாதிப் பேர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்தியாவில் மட்டும் 10,91,561 பேர் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதர நாடுகளின் நிலவரம் வருமாறு:—

தாய்லாந்து	1,02,210 பேர்
ஈரான்	18,146 பேர்
பர்மா	5,702 பேர்
சிங்கப்பூர்	357 பேர்

மற்றும் வடக்கு -- தெற்கு அமெரிக்கக் கண்டங்களில், 2,32,419 பேரும், ஐரோப்பாவில் 4,501 பேரும், ஆப்பிரிக்காவில் 812 பேரும் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய வாயு சிலிண்டர் ஆலை

கூட்டுறவுத் துறையில் நிறுவத் தமிழக அரசு திட்டம்

டில்லியிடம் அனுமதிகோரி யிருப்பதாக முதலமைச்சர் கலைஞர் தகவல்

கோவை, செப். 25 —

"தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் வாயு சிலிண்டர் ஆலை ஒன்றைத் துவக்குவதற்குத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

இதற்கு அனுமதி கோரி மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளதாகவும், இந்த ஆலை நிறுவப்பட்டால் இந்தியாவிலேயே இரண்டாவது 'பெரிய வாயு சிலிண்டர்' ஆலையாக இது விளங்கும் என்றும் அவர் கூறினார். (முதலாவது ஆலை பஞ்சாபில் உள்ள 'நைனி' என்னும் இடத்தில் உள்ளது)

"தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கான வாயு சிலிண்டர்களுக்கு இந்தியாவில் அதிக கிராக்கி உள்ளது; தற்போது நம் நாட்டில் ரூ. 7 கோடி மதிப்புள்ள தொழிற்சாலைக்கான ஆக்சிஜன் வாயு தேவைப்படுகிறது; இந்தத் தேவை ரூ. 15 கோடிக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்று முதல்வர் சொன்னார்.

கோவையை அடுத்த பெரிய நாயக்கன்பாளையத்தில் உள்ள 'சென்னை ஆக்சிஜன் -- அசிட்டிலீன்' ஆலையை முதலமைச்சர் முறைப்படி துவக்கிவைத்தார்.

இத்தாலியைச் சேர்ந்த 'ரிவோரியா' என்னும் நிறுவனத்தின் கூட்டுறவுடன், ரூ. 48 இலட்சம் செலவில் இந்த ஆலை நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஆலையை அமைத்துள்ள எஸ். நல்லபெருமாளையும் -- ரிவோரியா நிறுவனத்தையும் முதலமைச்சர் பாராட்டினார்.

அமைச்சர் க. இராசாராம்

விழாவிற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் தலைமைதாங்கினார்; 'தொழில் நுட்ப நிபுணர்களுக்குப் போதிய நிதியுதவி கிடைத்தால் அவர்கள் இதுபோன்ற தொழில் முனைப்புகளில் ஈடுபடுவார்கள்' என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தொழிலதிபரும் -- தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினருமான என். மகாலிங்கமும் இவ்விழாவில் உரையாற்றினார்; 'தொழில் துறைக்கான மூலப் பொருள்கள் மற்றும் இன்றியமையாப் பொருட்களின் விநியோகத்தைச் சீரமைக்க வேண்டும்' என்று அவர் கோரினார்.

இதுபற்றிப் பின்னர் முதல்வர் குறிப்பிடுகையில், இது சம்பந்தமான யோசனைகளை வரவேற்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறினார்.

"தமிழ்நாட்டில் தொழிலாளர்களிடையே அமைதி நிலவ ஒரு தீர்வு காணவேண்டியது அவசியம்" என்று திரு. ஜி. கே. தேவராசன் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தத் தொழிற்சாலை தொடங்கி 18 மாதங்கள் ஆகின்றன; சுமார் ரூ. 1 இலட்சம் இலாபத்துடன் நடக்கிறது.

நமது நாட்டில் ஒரு கோடி கன மீட்டர் பிராண வாயு இப்போது தேவைப்படுகிறது; எதிர்காலத்தில் 15 கோடி கன மீட்டர் தேவைப்படும்; சேலம் இரும்பு ஆலைக்கு மட்டும் 2 கோடிக்கான கன மீட்டர் தேவைப்படுகிறது; வார்ப்படத் தொழில் வரையில் இது பயன்படுகிறது; இரும்புகளை ஒட்டவைக்கவும் பயன்படுகிறது.

எனக்குமுன் பேசியவர்கள், 'பிராண வாயுவை அடைக்கப் போதிய சிலிண்டர்கள் இல்லை; வெளிநாடுகளைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது; இதனால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன' என்றார்கள்.

தமிழ்நாட்டில், 'சிலிண்டர்' தொழிற்சாலை அமைக்கத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது; மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம்; அனுமதி கிடைத்தவுடன், விரைவில் சிலிண்டர் தொழிற்சாலை நிச்சயம் அமைக்கப்படும்; இதனால் இத்தொழில் நல்ல வளர்ச்சியடையும்."

பரிசுச் சீட்டு

குலுக்கும் தேதி மாற்றம்

திருச்சி, செப். 25—

தமிழ்நாடு பரிசுச் சீட்டுக் குலுக்கல்களை இனி ஒவ்வொரு மாதமும் 10-ஆம்நாள் நடத்துவதென அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன்படி, பரிசுச் சீட்டின் 49 வது குலுக்கல், வரும் நவம்பர் மாதம் 10-ஆம் நாள் நடைபெறும்.

இதற்காக 'ஜே க்யூ.'--'ஜே. ஆர்.' 'ஜே எஸ்.' என்னும் மூன்று வரிசைப் பரிசுச் சீட்டுகள் வெளியிடப்படும்.

முதலாவது -- இரண்டாவது பரிசு பெறும் சீட்டுகளின் முந்தைய மற்றும் பிந்தைய எண்களைக் கொண்ட சீட்டுகளுக்கு ஆறுதல் பரிசுகளை வழங்கவும், அரசு ஏற்கனவே முடிவு செய்திருப்பது நினைவிருக்கலாம்.

நவம்பர் குலுக்கல் முதற்கொண்டு இந்த முடிவும் செயல்படுத்தப்படும்.

இதுவரையில், ஒவ்வொரு மாதமும் இறுதி நாளன்றுதான் பரிசுச் சீட்டுக் குலுக்கல்கள் நடத்தப்பட்டு வந்தன.

ஆங்கிலத்தை நீடிக்க முடிவு

ஷில்லாங், செப். 25—

அசாமில் உள்ள கௌஹாத்தி -- திப்ருகர் ஆகிய பல்கலைக்கழகங்களில் அசாமிய மொழியுடன் ஆங்கிலத்தையும் கற்பிக்கும் மொழியாக நீடிக்கப் பரிந்துரைக்கும் தீர்மானத்தை அசாம் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது.

கச்சார் மாவட்டத்தில், தனி பல்கலைக் கழகம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது; இதற்கு மத்திய அரசின் அங்கீகாரம் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சின்னஞ்சிறு தீவின் விடுதலை வேட்கை

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட முடிவு

நாச்சு, செப். 25—

பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருக்கும் சின்னஞ் சிறு தீவான 'பகாமா தீவு' விடுதலை கேட்கிறது.

வட அமெரிக்கா அருகில்--கரீபியன் கடலில் உள்ளது; இது 'பகாமா தீவு' என்று அழைக்கப்பட்டாலும்--பல சிறு தீவுகள் இதில் அடங்கியிருக்கின்றன, 'எல்லாத் தீவுகளினுடையவும் மொத்தப் பரப்பளவு 4400 சதுர மைல்; மக்கள் தொகை 118 000 ஆகும்.

இங்கிலாந்தின் ஆதிக்கத்தின்கீழ் உள்ள இந்தத் தீவுக்கு 33 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் உண்டு.

புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெற்றது (இந்தியாவைப்போல, 21 வயதானவர்களுக்கு வாக்குரிமை உண்டு).

தேர்தலில், தற்போது ஆளும் கட்சியாக உள்ள 'முன்னேற்றக் கட்சி' மீண்டும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கிறது; இந்தக் கட்சிக்கு 21 இடங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தத் தீவின் தலைமை அமைச்சராக லிண்டன் பின்ட்லிங் என்பவர் (முன்னேற்றக் கட்சித் தலைவர்) மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கையில், 'நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், பகாமா தீவுக்குச் சுதந்திரம் கேட்போம்; சூலை 10ந்தேதியன்று பகாமா சுதந்தர நாடாகிவிடும்' என்று அறிவித்திருந்தது.

இப்போது அந்தக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்திருப்பதால், பகாமா தீவுக்குச் சுதந்தரம் வழங்கும்படி பிரிட்டனிடம் தலைமை அமைச்சர் வற்புறுத்துவார்.

பகாமாவுக்கு இங்கிலாந்து அரசாங்கம் சுதந்தரம் கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகாமா தீவு கடந்த 343 ஆண்டுகளாக இங்கிலாந்து ஆதிக்கத்தில் இருந்து வருகிறது.

இங்கு வசிப்பவர்களில், 100க்கு 88 பேர் நீக்ரோக்களாவர்.

இந்தத் தீவில் ஏராளமான பழவகைகள் பயிரிடப்படுகின்றன; பருத்தி -- தக்காளி---ஆப்பிள்-- சோளம் ஆகியவை முக்கியப் பயிர்களாகும்,

காகிதம் தயாரிப்பதற்கான மரவகைகள் -- உப்பு -- மீன்வகைகள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நிறையப் பணம் சம்பாதிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்குச் சென்றுவர விமானப் போக்குவரத்தும் உண்டு.

பிற்பட்டோர் பட்டியலில் 'விசுவ பிராமணர்'கள்

சென்னை, செப். 25—

'விசுவ பிராமணர்' சமூகத்தினரையும் பிற்பட்ட வகுப்பினராகக் கருதி -- அவர்கட்கும் பிந்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகளை வழங்க வேண்டுமென்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

'விசுவகர்மா' சமூகத்தினரை, 'விசுவ பிராமணர்'கள் என்றும் அழைப்பதுண்டு; எனவே, அவர்களை முற்போக்குச் சமூகத்தினராகக் கருதப்பட்டதால், பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் அவர்கள் சேர்க்கப்படவில்லை.

சில மாதங்கட்கு முன்பு வெளிவந்த பிற்பட்டோர் சமூகப் பட்டியலில், 'விசுவ பிராமணர்' சமூகம் இடம் பெறாததால், அவர்கட்குச் சலுகை கிடைக்கவில்லை -- என்று அரசுக்குப் பல முறையீடுகள் வந்தன.

அரசு இதைப் பரிசீலனை செய்து 'விசுய பிராமணர்'கள் என்று அழைக்கப்பட்டாலும், 'விசுவகர்மா' சமூகத்தினர் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான்; எனவே, பின்தங்கிய சமூகத்தினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்கட்கு அளிக்கப்பட வேண்டும் -- என்று அரசு முடிவு செய்து உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

கள்ளக் கடத்தல்

20 பேருக்குத் தண்டனை

சென்னை, செப். 25—

1971—72-ம் நிதியாண்டில் கள்ளக் கடத்தல் குற்றங்களில் ஈடுபட்டிருந்த 20 பேர் சுங்கத் துறையினால் தண்டிக்கப்பட்டனர்.

வியாபாரிகள் --தரகர்கள்--கடைகளில் உதவியாளர்கள்--மாணவர்கள்--ஓர் இல்லத் தலைவி ஆகியோர் இந்த வழக்குகளில் தண்டனை அடைந்தனர்.

இந்தக் கள்ளக்கடத்தல் சம்பவங்களில் மொத்தம் ரூ. 3,71,195 சம்பந்தப்பட்டிருந்தது.

குற்றவாளிகட்கு ரூ. 100 முதல் ரூ. 4,000-வரையில் அபராதமும் -- ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஒரு மணி நேரத்தில் 480 குழந்தைகள்!

டாக்கா, செப் 26—

வங்காள தேசத்தில் ஒரு நிமிடத்திற்கு 8 குழந்தைகள் பிறக்கின்றன.

ஒரு மணி நேரத்தில் 480 குழந்தைகளும், ஒரு நாளில் 11,700 குழந்தைகளும், ஆண்டுக்குச் சராசரி 32,48,000 குழந்தைகளும் பிறக்கின்றன.

இந்த வேகத்தில் மக்கள் தொகை அதிகரித்தால், இன்னும் 10 ஆண்டுகளில் வங்காள தேசத்தின் மக்கள் தொகை இரண்டு மடங்காக உயர்ந்துவிடும்.

எனவே, ஐந்தாண்டுக் கால தீவிரக் கருத்தடைத் திட்டத்தை செயல்படுத்த வங்காள தேச அரசு முடிவு செய்திருக்கிறது.

பழைய முறை மீண்டும் செயலுக்கு வருகிறது

புதுடில்லி, செப் 25—

முன்னரே எக்சைஸ் தீர்வை செலுத்தப்பட்டதன் அடையாளமாகத் தீப்பெட்டிகளின்மீது காகித நாடா ஒட்டும் முறை(பண்ட்ரோல்) நான்கு ஆண்டுகட்குமுன் நிறுத்தப்பட்டது; இப்போது அம்முறை மீண்டும் செயலுக்கு வருகிறது.

இயந்திரச் சாதனங்களின் உதவியின்றித் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் -- மத்திய எக்சைஸ் பிரிவு இது சம்பந்தமாக ஓராண்டுக்குமுன் நியமித்திருந்த சிறப்புக் குழு ஒன்றும் ஒன்றும் கேட்டுக்கொண்டதன்பேரில் இந்த பழைய முறை இப்போது மறுபடியும் செயலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

பனியன் இயந்திரத் தொழில்களில் தமிழக அரசு அக்கறை

ஒத்துழைப்பு தருமாறு பஞ்சாப் தொழிலதிபர்கட்கு அழைப்பு

ஊக்கமும் சலுகையும் அளிக்கும் தொழில் துறையின் திட்டங்கள் ஆய்வு

பஞ்சாப் மாநிலத்தில் அமைச்சர் செ. மாதவன் சுற்றுப்பயணம்

புதுடில்லி, செப். 26—

தமிழ்நாடு தொழிலமைச்சர் திரு. செ. மாதவன், தற்போது பஞ்சாபில் சுற்றுப்பயணம் செய்துவருகிறார்; பஞ்சாபில் தனியார் சிறு தொழில் துறையினருக்கும் -- தமிழ்நாடு அரசுக்கும் இடையே ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆராய்வதற்காக அவர் இந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்; லூதியானா -- ஜலந்தர் -- அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் உள்ள தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அவர் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டுக்குப் பனியன் ஆலை இயந்திரங்கள் நிறையத் தேவை; இத்தகைய இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பங்களை அளிக்கும் பஞ்சாபிடம் தொழில் நுட்ப அறிவு இருக்கிறது" என்று அவர் சொன்னார்.

"தமிழ்நாட்டில் பனியன் தயாரிப்புக்கு 184 நூற்பாலைகள் உள்ளன; இவை, நாட்டிலுள்ள மொத்த நூற்பாலைகள் எண்ணிக்கையில் பாதியாகும்; இவற்றில் பெரும்பாலானவை நூற்பு இயந்திரங்கட்கு லூதியானாவில் உள்ள சிறு தொழில் இயந்திரத் தயாரிப்பாளர்களையே நம்பியுள்ளன; 40 பனியன் ஆலைகள் ஆண்டுதோறும் ரூ. 35 இலட்சம் பெறுமான இயந்திர வகை உறுப்புக்களுக்கு முற்றிலும் லூதியானாவில் உள்ள தயாரிப்பாளர்களையே நம்பியிருக்கின்றன" என்று அவர் குறிப்பிட்டுக் கூறினார்.

பஞ்சாபில் தொழில்கட்கு ஊக்கமும் சலுகையும் அளிக்கும் தொழில் துறையின் திட்டத்தைத் தாம் ஆராய்ந்து வருவதாகவும், தமிழ்நாடு அரசும் இதே போன்ற ஒரு திட்டத்தை இரு ஆண்டுகட்கு முன்னர் தொடங்கியது என்றும், இந்தத் திட்டத்தைத் தமிழக அரசு செம்மையுறச் செய்ய விரும்புவதாகவும் அமைச்சர் மாதவன் மேலும் தெரிவித்தார்.

சண்டிகரில் கடந்த ஞாயிறன்று இரு மாநில அரசுகளின் அமைச்சர்கள் அதிகாரிகளுடன் அமைச்சர் மாதவன் எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தார்.

பஞ்சாப் தொழில் அதிபர்களை -- குறிப்பாகப் பனியன் இயந்திரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை ஒத்துழைப்பு அளிக்குமாறு அமைச்சர் மாதவன் கேட்டுக் கொண்டார்.

லூதியானாவில் உள்ள பாணியில் தமிழ்நாட்டில் சிறு தொழில்களைத் துவக்க வருமாறு அவர்கட்கு அழைப்பு விடுத்தார்.

"'சிறு எஞ்சினியரிங்' பொருட்கள் -- பனியன் இயந்திரத் தொழில்களில் தமிழ்நாடு அரசு அக்கறை கொண்டிருக்கிறது" என்றார்.

லூதியானாவுக்கு அமைச்சர் மாதவன் சென்றிருந்தபோது, 'தமிழ்நாட்டில் சில குறிப்பிட்ட பகுதிகளில் தொழில்களை நிறுவ முன்வரும் பஞ்சாப் தொழிலதிபர்கட்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் -- நிலம் போன்ற எல்லா வசதிகளையும் மற்றும் பிற ஊக்கங்களையும் தமிழக அரசு அளிக்கும்' என்று தெரிவித்தார்.

உணவுத் தானிய உற்பத்தி குறைவு

வறட்சியைச் சமாளிக்க ரூ. 100 கோடி அனுமதி

லூதியானா, செப். 25—

"நாட்டின் பல்வேறு பகுதிகளில் வறட்சி காரணமாக உணவுத் தானிய உற்பத்தியில் ஒரு கோடி முதல் 1.20 கோடி டன் வரை குறைவு ஏற்படும்"

என்று மத்திய உணவு -- விவசாய அமைச்சர் பக்ருதீன் அலி அகமது கூறினார்.

"வறட்சியால் ஏற்பட்ட இழப்பைச் சமாளிப்பதற்காக மத்திய அரசு ரூ. 100 கோடி அனுமதித்துள்ளது" என்றார்.

"இந்த ஆண்டு ரபி பருவத்தில் 1.50 கோடி டன் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்ய முயற்சிகள் செய்யப்படும்" என்றார்.

"கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து 18 இலட்சம் டன் இரசாயன உரம் இறக்குமதி செய்ய முயற்சிகள் நடக்கிறது" என்று தெரிவித்தார்.

வேலைவாய்ப்புத் திட்டம் தயாரிக்க டெல்லி யோசனை

புனா, செப். 25—

தகுதி பெற்ற எஞ்சினியர்கள் -- டெக்னீஷியன்கள் -- டாக்டர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக மூன்று மாதங்களுக்குள் ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்படி மாநிலங்களுக்கு மத்திய அரசு யோசனை கூறியுள்ளது.

மத்திய திட்டத்துறை துணையமைச்சர் மோகன் தாரியா இத்தகவலைத் தெரிவித்தார்.

"இம்மாதம் 19, 20-ம் நாட்களில் டில்லியில் நடந்த மாநிலத் தொழிலமைச்சர்களின் கூட்டத்தைத் தொடர்ந்து இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது" என்றார்.

"வேலையில்லாமலிருக்கும் எஞ்சினியர்கள் -- டாக்டர்களுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் ஏதாவது வேலை கிடைத்துவிடும் என்று நம்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நியாய விலையில் இன்றியமையாப் பண்டங்கள்

தமிழ்நாடு முழுவதிலும் கிடைக்க ஏற்பாடு

சென்னை, செப். 25—

சில இன்றியமையாப் பொருட்களின் விலைகள் ஏறுமல் தடுக்கும் பொருட்டு, மாநிலமெங்கும் அப்பொருட்களை அதேத சனவரியிலிருந்து நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கத் தமிழக அரசு திட்டம் வகுத்திருக்கிறது.

துவரம் பருப்பு -- உளுந்தம் பருப்பு போன்ற பொருட்களை வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கையிருப்பில் அரசு வைத்துக் கொள்ளும்.

இத்தொடர்பில், அதிகாரி ஒருவர் கூறியிருப்பதாவது:—

"துவரம் பருப்பு இறக்குமதி செய்ய உத்தரப் பிரதேசம் -- மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள கூட்டுறவுத் துறையினருடன் அரசு ஏற்கனவே ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது; சில நூறு டன்கள் துவரம் பருப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று, உளுத்தம் பருப்பு வாங்கவும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இவை தவிர, மக்களுக்கு மைதா -- ரவை ஆகியவைவும் வழங்கப்படும்.

மாநிலமெங்கும் உள்ள சுமார் 90 இலட்சம் கார்டுதாரர்சட்கு இப்பொருட்களை வழங்குவதற்கான அமைப்புக்கள் அரசிடம் உள்ளன.

அரசு நிர்ணயித்துள்ள விலையில் 90 இலட்சம் கார்டுதாரர்கட்கு இப்போது சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது; இப்பொருட்களைப் போதுமான அளவு வாங்கி சேமித்து வைத்துக் கொண்டுவிட்டால், பின்னர் சிரமமின்றி கார்டுதாரர்கட்கு வழங்கி வர முடியும்.

சென்னை நகரில் சர்க்கரைக் கார்டுதாரர்கட்கு அரசின் 12 நியாய விலைக் கடைகள்மூலம் துவரம் பருப்பு -- உளுத்தம் பருப்பு -- ரவை--மைதா ஆகியவை நியாய விலையில் வேண்டிய அளவுக்கு வழங்கப்படுகிறது.

இப்போதுள்ள விலை விவரம் வருமாறு:—

துவரம் பருப்பு கிலோ கிராம் ரூ. 2 20.

உளுத்தம் பருப்பு கிலோ கிராம் ரூ. 3 30.

ரவை கிலோ கிராம் ரூ. 1 20.

மைதா கிலோ கிராம் ரூ. 1.16.

நகரில் மக்கள் நெருக்கமுள்ள பகுதிகளில் மேலும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

கூடுதலாகச் சர்க்கரை

"தமிழ்நாட்டில் மாதாந்தர சர்க்கரை ஒதுக்கீடு அக்டோபர் மாதத்திலிருந்து 10,000 டன்னாக உயர்த்தப்படும்.

இப்போது மாத ஒதுக்கீடு 9,000 டன்னாக இருந்துவருகிறது.

மாதாந்தர ஒதுக்கீட்டின் அளவு உயர்த்தப்படுவதால், பொது மக்களின் தேவைகளைச் சிரமம் ஏதுமில்லாமல் சமாளிக்க முடியும்.

ஆனால், தமிழ்நாடு முழுவதற்குமான தேவைகளை அரசு சமாளிக்க வேண்டியிருப்பதால் நவராத்திரி -- தீபாவளிப் பண்டிகைகட்குச் சென்னையில் கார்டுகளை வைத்திருப்பவர்கட்குக் கூடுதல் சர்க்கரை அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டுகளில் சென்னை -- கோவை ஆகிய நகரங்களில் மட்டுமே கார்டுகளின் மூலம் சர்க்கரை வழங்கப்பட்டது; அப்போது பண்டிகைகளுக்குக் கூடுதல் சர்க்கரை வழங்கப்படுவது வழக்கம்.

இப்போது தமிழ்நாடு முழுவதும் 90 இலட்சம் குடும்பங்கட்குச் சர்க்கரைக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; எனவே, கூடுதல் சர்க்கரை வழங்குவதானால் அரசின் பளு அதிகமாகிவிடும்."

வேலூரில் முதலமைச்சர் கலைஞர்

513 பேருக்கு மூக்குக்கண்ணாடி -- 5049 பேருக்கு நிலப் பட்டா வழங்கினார்

அமைச்சர்கள் ப. உ. சண்முகம் -- இராசாராம் ஆகியோர் பங்கேற்பு

வேலூர், செப். 26—

வேலூர் அரசினர் முஸ்லிம் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற இலவசக் கண் சிகிச்சை முகாம் நிறைவு விழா நேற்று நடைபெற்றது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், விழாவில் கலந்துகொண்டு--முகாமில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ;513 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பில், கண் சிகிச்சை நிதிக்கு ரூ. 3,52 245 நன்கொடையாக முதலமைச்சரிடம் வழங்கப்பட்டது; கலெக்டர் வி. ஆறுமுகம் இதை வழங்கினார்.

அதே மேடையில், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகளுக்கு நிலப் பட்டா -- வீட்டு மனைப் பட்டா வழங்கும் விழாவும் நடைபெற்றது; 5,049 பேருக்கு முதலமைச்சர், பட்டாக்களை வழங்கினார்.

வட ஆற்காடு மாவட்ட குடும்ப நல முனைப்பு இயக்கத்தையும் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்.

விழாவில் அமைச்சர்கள் ப. உ. சண்முகம், க. இராசாராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிலப் பட்டா மலரை அமைச்சர் க. இராசாராம் வெளியிட்டார்; கலைஞர் அதனைப் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சருக்கு வேலூர் நகராட்சித் தலைவர் மா. பா. சாரதியும், வி. எம். தேவராஜ் எம்.எல்.சி.யும் பொன்னாடை போர்த்தினர்; மலர்க் கிரீடம் அணிவிக்கப்பட்டு -- செங்கோலும் வழங்கப்பட்டது.

மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோட்பூர் திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர்கள் தொ.மு. சீனிவாசன், முருகையன், என். எஸ் பலராமன், வீராசாமி, ஏ. சி. நரசிம்மன், பன்னீர்செல்வம், கிருஷ்ணன், இராசகோபால், ஏ கே. துரைசாமி, துரை. முருகன், மா. பா. சாரதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உலகநம்பி, விசுவநாதன் ஆகியோரும், நல்வாழ்வுத் துறை இயக்குநர் பி. பாலகிருஷ்ணனும் பேசினர்.

தாமிரப் பத்திரம் பெறும் தியாகிகள்

சுதந்தர நாள் வெள்ளி விழா ஆண்டில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்தரப் போராட்ட வீரர்களுக்குத் தலைமையமைச்சர் சார்பில் தாமிரப் பத்திர விருதுகளை வழங்குமாறு முதலமைச்சர் கலைஞர் அவர்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ந் தேதியன்று மாலையில் சென்னையில் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடக்கும் விழாவில் முதலாவதாக சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 150 சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு முதலமைச்சர் தாமிரப் பத்திரங்களை வழங்குவார்.

கைப்பற்றினால் பரிசு தரப்படுமாம்!

திருப்பதி, செப். 26—

"ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து உணவுத் தானியங்களைக் கள்ளத்தனமாக வெளி மாநிலங்கட்குக் கொண்டு செல்லும் லாரிகளைக் கைப்பற்றினால், அவ்வாறு கைப்பற்றப்படும் ஒவ்வொரு லாரிக்கும் ரூ. 1000 வீதம் பரிசு அளிக்கப்படும்"

என்று, ஆந்திர முதலமைச்சர் பி. வி நரசிம்மராவ், பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

"ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உணவுத் தானியங்கட்குப் பற்றாக்குறை உள்ளபோது, அம்மாநிலத்திலிருந்து உணவுத் தானியங்கள் மைசூருக்குச் சட்டவிரோதமாக அனுப்பப்படுகின்றன" என்று அவர் கூறினார்.

வெளி மாநிலத்திலிருந்து ஆந்திரப் பிரதேசத்திற்குக் கிடைக்கக் கூடிய உணவுத் தானியங்களும் இவ்வாறு கள்ளத்தனமாக வேறு மாநிலங்கட்குக் கொண்டு செல்லப்படலாம் அல்லவா? என்று அவர் வினவினார்.

'இராவண காவிய'ப் புலவர் குழந்தை மறைவு

கோவை, செப். 25—

'இராவண காவியம்' படைத்த பகுத்தறிவு இயக்கப் புரட்சிப் புலவர் குழந்தை அவர்கள் இயற்கையெய்தினார் என்கிற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவை மாவட்டம்—பவானியில் உள்ள தமது இல்லத்தில் புலவர் அவர்கள் இயற்கையெய்தினார்.

அன்னாரை இழந்த அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து தந்திச் செய்தி அனுப்பியுள்ளார்.

புலவர் குழந்தை அவர்களது புரட்சிப் படைப்பான 'இராவண காவியம்' என்கின்ற நூல் காங்கிரசு அரசினரால் தடை செய்யப்பட்டிருந்தது.

தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முதலமைச்சர் கலைஞர், அந்நூலுக்கு இருந்த தடையை நீக்கினார்.

புலவரது மறைவு தமிழ் இலக்கிய உலகத்திற்கும் -- பகுத்தறிவு இயக்கத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

நெல் கொள்முதல் விலை

அக்டோபர் முதல் உயரும்

தமிழக அரசின் திட்டத்துக்கு வேளாண்மைப் பொருள் விலை நிர்ணயக் குழு ஒப்புதல்

சென்னை, செப். 26—

தமிழ்நாட்டில் விவசாயிகளிடம் அரசாங்கம் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு இனி அதிக விலை கொடுக்கும்.

வரும் அக்டோபர் 1-ந் தேதிமுதல் இந்தக் கொள்முதல் விலை உயர்வு நடைமுறைக்கு வருகிறது.

கொள்முதல் விலை உயர்த்தப்படுவதன்மூலம், விவசாயிகளுக்கு இப்போது கிடைப்பதைவிட இனி அதிகப் பணம் கிடைக்கும்.

கொள்முதல் விலை உயர்த்தப்படுவது குறித்துத் தமிழக அரசு உணவுத் துறைச் செயலாளர் இராம்சந்தர் வெளியிட்ட விவரங்களாவன:—

"தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் விலையை உயர்த்தத் தமிழக அரசு முடிவு செய்து – மத்திய அரசின் விவசாயப் பொருள் விலை நிர்ணயக் குழுவுக்குத் தெரிவித்திருந்தது; அதற்கு அது ஒப்புதல் தெரிவித்துவிட்டது.

அதன்படி, நெல் கொள்முதல் விலை உயர்த்தப்படுகிறது.

நடுத்தர – உயர்ந்த ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 2-ம், 'ஐ. ஆர். 8' போன்ற அமோக விளைச்சல் நெல்லுக்கு ரூ. 1-ம் உயர்த்தப்படும். (ஒரு குவிண்டால் என்பது 100 கிலோ; ஒரு மூட்டையில் பொதுவாக 72 கிலோ நெல் இருக்கும்).

இதுவரையில் தமிழ்நாட்டில் உயர்ந்த ரக அரிசி மட்டும்தான் இருந்துவந்தது; இனிமேல், மிக உயர்ந்த ரக அரிசியையும் அனுமதிக்கும்படி கேட்டிருந்தோம்; அதற்கும் அவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டனர்.

சீரகச் சம்பாவைத்தான் மிக உயர்ந்த ரக அரிசியாக மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; இதன் நீளம் மெல்லிய மீட்டர் இருக்கும்.

இந்த மிக உயர்ந்த ரகத்தில் தமிழ்நாட்டின் ஆற்காட்டு கிச்சிலியையும் சேர்க்க எண்ணியிருக்கிறோம்.

விலையை உயர்த்துவதன் மூலம் உயர் ரக நெல்லுக்குக் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 56 ஆகிறது.

பொதுவாக, விவசாயிகள் கோரிக்கைக்கு இணங்க இந்தக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது; இவ்வாறு செய்வதன்மூலம், அரசாங்கத்துக்கு அதிகக் கொள்முதல் நெல் கிடைக்க வழி ஏற்படுகிறது; காரணம், கொள்முதல் நெல் விலைக்கும் -- வெளிமார்க்கெட்டு விலைக்கும் உள்ள வேறுபாடு குறைவதுதான்.

இந்த விலை உயர்வு, அக்டோபர் 1-ந் தேதிமுதல செயலுக்கு வருகிறது; குறுவை சம்பா அறுவடைக்கு இந்தப் புதிய விலை பொருந்தும்."

கேள்வி:— "இந்தக் கொள்முதல் விலை உயர்வினால், பொதுமக்களுக்கு விற்கும் அரிசியின் விலையும் உயருமா?"

பதில்:— "அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும்; ஏனென்றால் இலாப -- நட்டம் இல்லாத முறையில் நாங்கள் விற்று வருகிறோம்."

மு. க. முத்து ரசிகர் மன்றம் -- கலைஞரின் வேண்டுகோள்

சென்னை, செப். 26—

திரைப்பட நடிகர் மு. க. முத்துவின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள மன்றங்களைக் கலைத்துவிடுமாறு கழகத் தோழர்களைக் கேட்டுக் கொண்டு கலைஞர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

"கழகத்தின் தலைவன் என்ற முறையிலே அல்ல -- 'மு. க. முத்துவின் தந்தை' என்ற முறையில் இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுக்கின்றேன்.

என்மகன் முத்துவின் வாழ்க்கை எப்படியாகுமோ என்று எண்ணியிருந்து--பிறகு 'எப்படியோ ஆகிவிட்டும் போகட்டும்' என்று இருந்து விட்டவன் நான்!

முத்து உட்பட என் எல்லாப் பிள்ளைகளைப் பற்றியுமே கவனிக்கவோ -- கவலைப்படவோ எனக்கு நேரம் இருந்ததில்லை; என் பிள்ளைகள் என்ன வகுப்பில் படிக்கிறார்கள் என்பதைக் கூட அவர்களை அடிக்கடி கேட்டால்தான் எனக்கு தெரியும் என்பதை என்னுடன் நெருங்கிப் பழகும் கழக நண்பர்கள் அறிவார்கள்.

மு. க. முத்து, கலையுலகில் நுழைந்திட முயன்றான்; அந்த முயற்சியில் சிறிதளவு வெற்றியும் பெற்றுள்ளான்; ஆனால், முதல் படம் வெளிவந்துள்ள இந்தத் தொடக்க நிலையிலேயே அவன் பெயர், பிரச்சினைக்குரிய ஒன்றாகிவிட்டது; எந்தப் பிரச்சினையும் கழகத்தைப் பாதிக்குமானால் நான் அதை எப்போதும் அனுமதித்ததில்லை.

மு. க. முத்துவின் பெயரால் மன்றங்களும் -- ரசிகர் மன்றங்களும் அமைத்துள்ள தோழர்கள், அவைகளைக் கட்சிப் பற்றுடன் அமைத்துள்ளபோதிலும்; அது பிரச்சினையாகி விட்ட பிறகு அதை ஒரு கட்டத்தில் நிறுத்தி விடுவதே மேலாகும்.

ஆகவே, மு. க. முத்து மன்றங்களையோ -- மு. க. முத்து ரசிகர் மன்றங்களையோ தொடங்கியுள்ள கழகத் தோழர்கள் உடனடியாக அவைகளைக் கலைத்துவிட வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துவுக்கு என ஏதாவது நடிப்புத் திறமையிருந்து -- அதைக் கழக நண்பர்களாகிய நீங்களும் -- பொது மக்களும் புகழ்ந்து பாராட்டினால் போதுமானது.

அவனது கலைத் தொழில் வளருவதற்கு அவனது ஆற்றல்தான் மூலதனமாக இருக்கவேண்டுமே தவிர, கட்சியின் செல்வாக்கு அதற்கான விளம்பரக் கருவியாகப் பயன்படக்கூடாது என்பதால், இந்த என் அன்பு வேண்டுகோளை அனைவரும் ஏற்று, மு. க. முத்துவின் பெயரால் உள்ள மன்றங்களைக் கலைத்து விடுமாறு கேட்டுக் கொள்வதோடு, மு. க. முத்துவைக் கழக நிகழ்ச்சிகளுக்கோ -- கூட்டங்களுக்கோ அழைக்கவேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பாவம் -- அவன் இளந்தளிர்! நமது அரசியலை அவன் தாங்கமாட்டான்! தயவு செய்து அவனை விட்டுவிடுங்கள்!"

அன்புள்ள
மு. கருணாநிதி

லெவி சர்க்கரைக்கு விலை நிர்ணயம்

மத்திய அரசு விரைவில் அறிவிக்குமாம்

"சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரையில் அரசுக்குத் தரும் 70 சதவிகித சர்க்கரையின் விலை குறித்தும் -- அதனை மக்களுக்கு விற்க வேண்டிய விலை குறித்தும் தனது கொள்கையினை மத்திய அரசு விரைவில் அறிவிக்கும்" என்று மத்திய வேளாண்மைத் துறை இணை அமைச்சர் ஷேர்சிங் இங்கு தெரிவித்தார்.

இதன் தொடர்பாக ஒரு முடிவை அரசு எடுத்திருப்பதாகவும், ஆயினும் மாநில அரசுகளைக் கலந்தாலோசித்த பின்னர்தான் இதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

சென்னைக்கு ம.பி.பச்சரிசி

சர்க்கரைக் கார்டு உள்ளவர்கட்குக் கிடைக்கும்

சென்னை, செ. 26—

சென்னை நகரிலுள்ள சர்க்கரைக் கார்டு வைத்திருப்போருக்கு அக். 1 லிருந்து குறைந்த விலையில் ம.பி. பச்சரிசி கிடைக்கும்.

இரு வாரத்திற்கு ஒரு தடவை 15 கிலோ அரிசியை அரசாங்க ரேஷன் கடைகளிலிருந்தும் கூட்டுறவுக் கடைகளிலிருந்தும் பெறலாம்.

இதுவரையில் சர்க்கரைக் கார்டு வைத்திருப்போருக்கு மாதத்துக்கு 10 கிலோ நெல்லூர்ப் பச்சரிசி வழங்கப்பட்டு வந்தது.

வறட்சி நிலை காரணமாக நெல்லூர் அரிசி சப்ளையை ஆந்திரம் நிறுத்தி விட்டதால், சர்க்கரைக் கார்டுகாரர்களுக்கு ம.பி. பச்சரிசியை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்

27--9--72

பொள்ளாச்சி

20-வது வட்ட தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா-- மேல்நிலை தண்ணீர் தொட்டித் திறப்பு விழா; மாலை 7 மணிக்கு சுப்பிரி கிணறு வீதியில்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி., ஏ. எம். ஆர். மோகன்ராசு எம்.பி., ஏ. பி. சண்முகசுந்தரம் எம். எல். ஏ., தி. இராமசாமி, க. ரா. சுப்பையன், கொடுமுடி கிருஷ்ணன், மு. தேவராசன், நா. மாரிமுத்து எம்.சி., அ. வெங்கடாசலம், வ. அ. பழனிசாமி எம்.சி.

வேளாண்மைத் துறை அமைச்சர்

மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

செப். 27, 28: திருநெல்வேலி மாவட்டம்—திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் அழகியநம்பி ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] இட்டு வெளியிடப்படுகிறது.